மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Mahakavi Bharati and Yoga

K. Harinath[1], Supervisor Dr. T. Parthiban[2]

Doctoral Researcher[1], Assistant Professor[2], Department of Philosophy, Tamil University, Thanjavur, India

Manuscript ID : **MT171A0161**

Volume : **4**

Issue : **1**

Month : **March**

Year : **2024**

Received: 07.03.2024
Revised: 16.03.2024
Accepted: 22.03.2024
Published: 29.03.2024

Pages : 24-30

DOI: 10.5281/zenodo.10911461

ABSTRACT:

Bharatiyar was a Yogic Purusha who appeared in the nineteenth century and died in the twentieth century. The period of his life was the period of the world's greatest famines and the First World War. Bharatiyar has been an academic who passed the entrance course. As his contribution to spirituality, he has given commentary on Panjali Sapadham, Bhagavad Gita and Patanjali Yoga Sutras. Meeting Nivetha Ammaiyar, interaction with Kullachami preacher, Santo Krishnasamy learns yoga practice. All these show him as a yogic man.

KEYWORDS:

Nivedita Devi, Varanasi, Introductory Study, Bhagavad Gita, Panjali Sapadham, Patanjali Yoga Sutras, Pittan, Yoga Purusha, Santo Krishnasamy

மகாகவி பாரதியும் யோகமும்

க. ஹரிநாத்[1], **நெறியாளர். முனைவர் தி. பார்த்திபன்**[2]
முனைவர்பட்ட ஆய்வாளர்[1], *உதவிப்பேராசிரியர்*[2],
மெய்யியல் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

பாரதியார் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி இருபதாம் நூற்றாண்டில் மறைந்த ஒரு யோக புருஷர் ஆவார். இவர் வாழ்ந்த காலமானது உலக அளவில் மிகப்பெரும் பஞ்சங்கள், முதல் உலகப்போர் நடைபெற்ற காலமாகும். பாரதியார் பிரவேச படிப்பில் தேர்ச்சி பெற்ற ஒரு கல்வியாளராக இருந்துள்ளார். ஆன்மீகத்திற்கான தனது பங்களிப்பாகப் பாஞ்சாலி சபதம், பகவத் கீதை, பதஞ்சலி யோக சூத்திரங்கள் இவற்றிற்கு விளக்கவுரை தந்துள்ளார். நிவேதா அம்மையாரின் சந்திப்பு, குள்ளச்சாமி சாமியாருடன் தொடர்புகள், சாண்டோ கிருஷ்ணசாமியிடம் யோகாப் பயிற்சி கற்றுக்கொண்டார். இவை அனைத்துமே அவரை ஒரு யோகப் புருஷராகவே காட்டுகிறது.

கருச்சொற்கள்

நிவேதிதா தேவி, வாரணாசி, பிரவேசப் படிப்பு, பகவத் கீதை, பாஞ்சாலி சபதம், பதஞ்சலி யோக சூத்திரங்கள், பித்தன், யோக புருஷர், சாண்டோ கிருஷ்ணசாமி.

முன்னுரை

சுவாமி விவேகானந்தரின் சீடரான நிவேதிதா அம்மையாரை தனது ஆன்மீக குருவாகப் பாரதியார் ஏற்றுக் கொண்டார். இதற்காகக் காசி அல்மோடாவில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐந்திலும், கல்கத்தா டம்டம் பகுதியில் ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஆறிலும் சென்று அம்மையாரிடம் ஆசி பெறும் பொழுது ஏன் உங்கள் மனைவி செல்லம்மாள் வரவில்லை என்ற நிவேதிதா அம்மையாரின் கேள்வி பாரதியாருக்குள் யோகம் சார்ந்து பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.[1] (நக்கீரன், 1982)

காற்றை வணங்குதல்

நீதி உயர்ந்த மதி கல்வி என்ற பாரதியார், அன்பினை அதற்கும் மேலாக வலியுறுத்துகிறார். அன்பு நிறைய உடையவர்கள் மேலோர். உயிர்களிடத்தில் அன்பு வேண்டும் என்று வலியுறுத்துகிறார்.[2] (மகாலிங்கம் நா,1987).

காற்றைப் புகழ நம்மால் முடியாது
----------   (பல்வகைப் பாடல்கள்- வசன கவிதை)

இந்த பாடலில் முதன்மையான வாயுக்கள் பிராணன், அபானன், வியானன், உதானன், சமானன் இவைகள் நம்மைக் காக்க வேண்டும். உயிரை வணங்குகிறேன் என்கிறார்.[3] (உஷாராணி.சு, 2021)

பாரதியார் கல்வியாளர்

பாரதியாருடைய மூத்தவர்கள் தமிழகத்தின் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள சீவலப்பேரி என்ற கிராமத்தைச் சார்ந்தவர்கள். பாரதியாருடைய தந்தையார் சின்னச்சாமி ஐயர் என்ற சுந்தரராஜ ஐயர் தனது மாமனாரின் ஊரான நெல்லை மாவட்டத்தின் சீவலப்பேரி அருகாமையில் உள்ள எட்டயபுரத்திற்கு குடிபெயர்க்கிறார். எட்டயபுரத்தில் புதிய பஞ்சாலையை ஆயிரத்து எட்டுநூற்று தொண்ணூற்றிரண்டாம் ஆண்டில் நிறுவுகிறார். அவருடைய கணக்குகளும், எந்திர நுணுக்கங்களும் ஆலையை நடத்துவதற்குரிய நம்பிக்கையைத் தந்தது. இந்தப் பஞ்சாலைக்கு எட்டயபுரம் சமஸ்தானம் ரூபாய் ஐந்தாயிரம் என்ற பெரிய தொகையை முதலீடு செய்திருந்தது.

பிரிட்டிஷ் வர்த்தகர்கள் செய்த சதியால் பஞ்சாலை முடங்கி, பெரிய நஷ்டம் அடைந்தது. இந்த பஞ்சாலை ஆயிரத்து எட்டுநூற்று தொண்ணூற்று ஐந்தாம் ஆண்டில் பெரும் நஷ்டத்தினால் மூடப்பட்டது. ஆலையில் முதலீடு செய்வதற்குக் காரணமானவர்கள் சமஸ்தானத்தின் திவானா? ஜமீன் சிற்றப்பாவா? அல்லது court of wards அனுமதியில் செய்யப்பட்டதா? என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. இந்த தருணத்தில் பாரதியார் எட்டயபுரத்தில் ஆரம்பப் பள்ளிக் கல்வியை முடித்தார்.[4] (வேங்கடா சலபதி. ஆ. ரா, 2016)

குடும்பத்தில் பொருளாதாரம் நலிவடைந்த நிலையில், கல்வி கற்பதற்கான வாய்ப்புகள் முழுமையாக இழந்த நிலையில் பதினான்கு வயது நிரம்பிய பாரதியார் அன்றைய எட்டயபுரம் ஜமீன்தாருடைய சிற்றப்பன் வெங்கடேஸ்வர எட்டப்பனுக்கு கல்வியை கற்பதற்கு உதவி புரியுமாறு கடினமான நடையில் ஒரு கவிதையாகக் கடிதம் எழுதுகிறார். இந்த நிகழ்வானது நடைபெற்றது ஆயிரத்து எட்டுநூற்று தொண்ணூற்று ஏழாம் ஆண்டு ஜனவரி மாதம் இருபத்தி நான்காம் தேதி ஆகும். நெல்லையூர் என்கின்ற திருநெல்வேலி இந்து காலேஜ் என்ற உயர்நிலைப் பள்ளியில் பாரதி சில ஆண்டுகள் கல்வி கற்கின்றார். பஞ்சாலை பெரும் நஷ்டத்தினால், மனம் உடைந்து வாழ்ந்த பாரதியாருடைய தந்தையார் காலமாகிறார்.

இந்த நிலையில் குடும்ப வறுமை நிலையின் காரணமாகத் தனது அத்தை குப்பம்மாள் மற்றும் மாமன் கிருஷ்ண சிவனைச் சந்திக்கப் பாரதத்தின் வட பகுதியில்

உள்ள காசிக்குச் செல்கிறார். காசியில் உள்ள மிசன் கல்லூரி, ஜெய் நாராயணன் கல்லூரி என்ற இரு கல்லூரிகளில் பாரதி படித்த பிறகு, அலகாபாத் பல்கலைக்கழகத்தின் பிரவேசப் பரிட்சையில் தேர்ச்சி பெறுகின்றார். இந்த படிப்பு தற்போதைய பன்னிரண்டாம் வகுப்புக்குச் சமமான தேர்வாகும். அன்னிபெசண்ட் அம்மையாருடன் உரையாடி வந்துள்ளார். இதன் மூலம் ஒரு நூற்றாண்டுக்கு முன்பே பாரதியார் கல்வியாளர் என்பது நிரூபணம் ஆகிறது. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து இரண்டாம் ஆண்டு காசியில் இருந்து திரும்புகின்ற பாரதியார், மதுரை, சென்னை, புதுவையில் வாழ்ந்த பிறகு ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு இறுதியில் தனது மனைவி செல்லம்மாளின் சொந்த ஊரான திருநெல்வேலி அருகாமையில் உள்ள கடையத்தில் வாழ்கின்றார்.[5] (பத்மநாபன். ரா.அ, 2012)

பாராதியாரின் யோகா

பாரதியார் யோகாப் பயிற்சிகளைச் சாண்டோ கிருஷ்ணசாமி என்பாரிடம் கற்றுக் கொண்டுள்ளார். சாண்டோ கிருஷ்ணசாமியின் புகைப்படம் பாரதியாரின் சீடர் ரா.கனகலிங்கம் எழுதிய என் குருநாதர் பாரதியார் நூலில் வந்துள்ளது.[6] (கனகலிங்கம். ரா, 2015)

பாரதியார் சித்தர் மரபில் தன்னை பிணைத்துக் கொள்ளக்கூடிய வகையில் எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார் அப்பா யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில் என்று கூறுகிறார்.[7] (ஆண்டியப்பன்.தே,1982)

பாரதியாரின் யோகப் பங்களிப்பிற்கு முக்கிய சான்றாக பாஞ்சாலி சபதம், பதஞ்சலி யோக சூத்திரங்கள் என்ற இரண்டு நூல்களுக்கு விளக்க உரை எழுதி உள்ளார். இதில் பாஞ்சாலி சபதம் மின் பதிப்பாக விக்கிப்பீடியாவில் வந்துள்ளது. பதஞ்சலி யோக சூத்திரங்கள் சமாதி பாதம் மட்டுமே பாரதியார் விளக்க உரை தந்துள்ளார். என்ன காரணத்தினாலோ மற்ற சாதனை, விபூதி, கைவல்யம் பாதங்களுக்கு விளக்கவுரை எழுதவில்லை. பாரதி பிரசுராலயம் வெளியிட்ட இந்த நூலின் மின் பதிப்பை, பாஞ்சாலி சபதத்துடன் சேர்த்து விளக்க உரையாக மின் பதிப்பாகத் தீபம் வெளியீடு பைரவி தாசன் வெளியிட்டுள்ளார். பாரதியார் பகவத்கீதைக்கும் பேருரை எழுதியுள்ளார்.[8] (அமேசான், விக்கிப்பீடியா, 2024)

பித்தன் பாரதியார்

பாரதியார் பித்தராகவே வாழ்ந்தார் என்பதற்குச் சாட்சியாக, அணிலுக்கும் குருவிக்கும் அரிசியை வாரி இறைத்து விடுவார். அந்த அரிசி பல நாட்கள் கடன் வாங்கி உலையிலிட வைத்திருந்த அரிசியாகவே இருந்துள்ளது. கட்டிக் கொண்டிருக்கக் கூடிய ஆடையையும் அவிழ்த்து எளியவர்களுக்கு கொடுத்து விடுவார். சாமியார்களோடு

திரிவதும், எந்த பேதமும் இல்லாமல் எந்த இடத்திலும் உணவை எடுத்துக் கொள்வதும், மனைவியின் கையை கோர்த்துக் கொண்டு தெருவில் நடப்பதும், இது போன்ற செயல்கள் எல்லாம் இதைப் பற்றி அறியாதவர்களை ஒரு பித்தராகவே பாரதியாரைக் கருத வைத்தது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு காந்தியடிகள் சென்னையில் இராஜாஜி வீட்டில் தங்கி இருந்தபோது, யாருடைய அனுமதியும் பெறாமல் காந்தி அமர்ந்திருந்த இடத்திற்குச் சென்றதும், அவருடைய மெத்தையிலே அமர்ந்து காந்தியுடன் உரையாடியதும், மிஸ்டர் காந்தி என்று அழைத்ததும், பலருக்கும் ஒரு விதமாகவே எண்ணத் தோன்றியது. கலந்துரையாடலின் போது காந்தியடிகள் அவரை வாழ்த்துகிறேன் என்று கூறினார். காந்தியடிகள் இராஜாஜியிடம் இவர் ஒரு தமிழ்நாட்டுத் தேசிய கவி இவரைப் பத்திரமாகப் பாதுகாக்கத் தமிழ்நாட்டில் எவரும் இல்லையா? என்று வினவினார்.[9] (நக்கீரன், 1982)

வேதங்களுக்கு விளக்க உரையைப் பாரதியார் எழுதியுள்ளார். ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபத்தி எட்டாம் ஆண்டு இந்திப் பிரச்சார அச்சு இயந்திரச் சாலை, திருவல்லிக்கேணி, சென்னை மூலம் வெளிவந்துள்ள வேத ரிஷிகளின் கவிதை என்ற நூலில் வேதங்களுக்கு விளக்கங்களைத் தந்துள்ளார்.[10] (சுப்பிரமணிய பாரதியார், 1928)

மனம் செம்மையாக

பாரதியார் ஜாதி மதங்களைக் கடந்த மகாகவிஞன் என்பதற்கு எடுத்துக்காட்டாக இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை என்ற சொற்பொழிவைப் பொட்டல் புதூரில் நிகழ்த்தியிருக்கிறார். இயேசு, அல்லாஹ், ஈசன் என்ற எந்த ஏற்றத்தாழ்வும் இல்லை என்பதை அவருடைய கவிதை வரிகளில் கூறியுள்ளார். மனதைச் செம்மையாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, முத்துமாரி என்ற பாடலை பாரதியார் இயற்றியுள்ளார்.

மணி வெளுக்கச் சாணையுண்டு - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி
மனம் வெளுக்க வழியில்லை - எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரி.[11] (பெரியசாமித் தூரன்.ம.ப,1981)

குள்ளச்சாமி சாமியார்

புதுவையில் பாரதியார் வாழ்ந்த காலத்தில் பல நாட்கள் குள்ளச்சாமி சாமியாருடன் தன்னுடைய நேரத்தைக் கழித்திருக்கிறார். பாரதியார் என்ற ஆளுமையை ஆட்டி வைத்த ஆளுமையாக குள்ளச்சாமி வாழ்ந்துள்ளார். குள்ளச்சாமி சாமியார் விருப்பப்பட்ட பொழுது பாரதியாரிடம் வருவதும், திடீரென்று சென்று விடுவதுமாக ஒரு சிறு குழந்தையைப் போன்று மனித விதிகளுக்கு கட்டுப்பாடு இல்லாமல் வாழ்ந்துள்ளார்.[12] (பாரதியார் கட்டுரைகள், 2021)

முடிவுரை

காசியில் அவர் வாழ்ந்த நான்கு வருட காலங்கள், புதுச்சேரியில் அவர் வாழ்ந்த பத்து வருட காலங்கள் அங்கு அரவிந்தர் அன்னை அவர்களுடன் தொடர்புகள், குள்ளச்சாமி சாமியாருடன் திரிந்தது, கல்கத்தாவின் நிவேதிதா தேவி அம்மையாருடைய சந்திப்பும் ஆசீர்வாதங்களும் பெற்றது. எட்டயபுரம் ஜமீன்தாருடைய அவையில் பாரதியார் பணிபுரிந்த காலத்தில் வந்த ஊதியத்தை முழுக்க புத்தகங்களாக வாங்கி குவித்தது, வாரணாசியில் வாழ்ந்த காலத்தில் ஆன்மிக வேரின் மூலம் அவர் பெற்ற யோகப் பார்வை, இவ்வாய்வுக் கட்டுரை நிகழ்வுகள் பாரதியார் ஆன்மிக நேயராக, அன்பு, அருள், கருணை சார்ந்த வாழ்வியல் செயல்பாடுகளை வெளிப்படுத்துகின்றன. இதனால் யோக புருஷராகவே வாழ்ந்துள்ளார் என்பது உறுதி ஆகின்றது.

பாரதியாரைப் போற்ற வேண்டும், பாதுகாக்க வேண்டும் என்ற தொலைநோக்கு பாரதியார் வாழ்ந்த காலத்தில் காந்தியடிகளுக்குத் தெரிந்திருக்கிறது. இதை நாம் கனத்த இதயத்துடன் ஏற்றுக்கொள்ள வேண்டும். சாண்டோ கிருஷ்ணசாமியிடம் யோகா பயின்றதற்கான ஆதாரங்கள் திரட்டப்படும் பட்சத்தில் யோகத்தில் பாரதியினுடைய பங்களிப்பை நிறைவு செய்வதாக அமையும் என்று இவ்வாய்வுக் கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

அடிக்குறிப்புகள்

1. நக்கீரன், 1982, பக். 10,11,12,13
2. மகாலிங்கம்,1987, பக். 51
3. உஷாராணி, 2021, பக். 608, 609
4. வேங்கடா சலபதி, 2016, பக். 93, 94
5. பத்மநாபன், 2012, பக். 640, 641, 642, 645, 651
6. கனகலிங்கம், 2015, பக். 23
7. ஆண்டியப்பன்,1982, பக். 1

8. அமேசான், விக்கிபீடியா, 2024
9. நக்கீரன், 1982, பக். 122, 123
10. சுப்பிரமணிய பாரதியார், 1928, பக். 46, 47, 48, 77
11. பெரியசாமித் தூரன், 1981
12. பாரதியார் கட்டுரைகள், 2021, பக். 33, 34

துணைநூற்பட்டியல்

1. நக்கீரன். *பல்கோண பாரதி.* குரோம்பேட்டை, சென்னை, முதல் பதிப்பு, வேணி வெளியீடு, ஜனவரி 1982.
2. நா, மகாலிங்கம். *அருட்கவியும் மகாகவியும்.* சிவகங்கை, முதற்பதிப்பு, அன்னம் பிரைவேட் லிமிடெட், அக்டோபர் 1987.
3. சு, உஷாராணி. *பாரதியார் கவிதைகள் மூலமும் தெளிவுரையும்.* சென்னை, இரண்டாம் தொகுதி, ஐந்தாம் பதிப்பு, வர்த்தமானன் பதிப்பகம், செப்டம்பர் 2021.
4. ஆ ரா, வேங்கடா சலபதி. *எழுக நீ புலவன் பாரதி பற்றிய கட்டுரைகள்.* நாகர்கோயில், முதல் பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், 11 டிசம்பர் 2016.
5. குமரி ஆனந்தன்., ரா அ, பத்மநாபன். *சிந்தனைப் பண்ணையில் பாரதி.* சென்னை, இரண்டாம் பதிப்பு, வானதி பதிப்பகம், ஏப்ரல் 2012.
6. ரா, கனகலிங்கம். *என் குருநாதர் பாரதியார்.* தஞ்சாவூர், தமிழ்ப் பல்கலைக்கழகம், சனவரி 2015.
7. தே, ஆண்டியப்பன். *பாரதியும் சித்தர் மரபும் கட்டுரை பாரதி இயல்.* சிதம்பரம், முதற்பதிப்பு, மணிவாசகர் பதிப்பகம், மதுரை காமராசர் பல்கலைக்கழக அஞ்சல் வழி தொடர் கல்வி தமிழ் துறை வெளியீடு, டிசம்பர் 1982,
8. சி, சுப்பிரமணிய பாரதி. *பகவத் கீதை, பதஞ்சலி யோக சூத்திரம் - பாரதியார் விளக்கவுரை.* தீபம் வெளியீடு, 2023.
9. சுப்பிரமணிய பாரதியார். *வேத ரிஷிகளின் கவிதை.* திருவல்லிக்கேணி, சென்னை, இந்திப் பிரச்சார அச்சு இயந்திரச் சாலை, 1928.
10. ம ப, பெரியசாமித் தூரன். *பாரதியும் கடவுளும்.* சென்னை, முதல் பதிப்பு, வானதி பதிப்பகம், மார்ச் 1981.
11. மகாகவி பாரதியார். *பாரதியார் கட்டுரைகள்.* சென்னை, ஐந்தாம் பதிப்பு, வர்த்தமானன் பதிப்பகம், செப்டம்பர் 2021.

REFERENCES

1. Nakiran. *Polgona Bharati*. Chromepet, Chennai, First Edition, Veni Publications, January 1982.
2. N, Mahalingam. *Arutkavi and Mahakavi*. Sivagangai, First Edition, Annam Private Limited, October 1987.
3. S, Usharani. *Bharatiyar Poems Source and Explanation*. Chennai, Volume II, Fifth Edition, Varthamanan Publishing House, September 2021.
4. A R, Venkata Salapati. *Essays on Eguga Ne Pulavan Bharathi.* Nagercoil, First Edition, Kalachuvadu Publishing House, 11 December 2016.
5. Kumari Anandan, R A, Padmanabhan. *Bharti on the Thought Farm*. Chennai, Second Edition, Vanathi Publishing House, April 2012.
6. R, Kanakalingam. *My Gurunath is Bharatiyar*. Thanjavur, Tamil University, January 2015.
7. T, Andiappan. *Bharti and Siddhar Tradition Essay Bharti unit*. Chidambaram, First Edition, Manivasakar Publishing House, Madurai Kamarasar University Postgraduate Tamil Department Publication, December 1982,
8. C, Subramania Bharati. *Bhagavad Gita, Patanjali Yoga Sutra - Commentary by Bharatiyar*. Deepam Publication, 2023.
9. Subramania Bharatiyar. *Poetry of Vedic Rishis.* Tiruvallikeni, Chennai, Hindi Propaganda Printing Press Road, 1928.
10. M P, Periyasamy Dooran. *Bharati and God.* Chennai, First Edition, Vanathi Publishing House, March 1981.
11. Mahakavi Bharatiyar. *Bharatiyar Essays.* Chennai, Fifth Edition, Varthamanan Publishing House, September 2021.